









சென்னை மலர்: 01 இதழ்: 201 15.01.2026 வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 201 | Thursday | pages 4 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# “இந்திய கலாச்சாரத்தின் ஒரு பகுதியே தமிழ் கலாச்சாரம்”

**புதுடெல்லி, ஜன.15:**

“தமிழ் கலாச்சாரம் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. அது இந்திய கலாச்சாரத்துடன் இணைந்தது” என்று டெல்லியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

மத்திய இணை அமைச்சர் எல். முருகனின் டெல்லி வீட்டில் இன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில், பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தமிழகத்தின் பாரம்பரிய முறைப்படி, பானையில் பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டது. பானையில் பால் ஊற்றி பிரதமர் மோடி வழிபட்டார்.

இதனையடுத்து, மாடுகளுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, உணவளித்த பிரதமர், கால்நடைகளுக்கு நன்றி தெரிவித்தார். இந்த கொண்டாட்டத்தில், எல். முருகன் மற்றும் அவரது குடும்பத்தினரும், பாஜக

## “இந்திய கலாச்சாரத்தின் ஒரு பகுதியே தமிழ் கலாச்சாரம்”



அமைப்புச் செயலாளர் பி.எல். சந்தோஷ், தமிழக பாஜக முன்னாள் தலைவர்கள் தமிழிசை சவுந்தரராஜன், அண்ணாமலை, பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்ட கட்சியினர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்த நிகழ்வில் அண்மையில் வெளியான ‘பராசக்தி’ படத்தில் நடித்த நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அப்படத்தின் இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய பிரதமர் மோடி,“தமிழ் கலாச்சாரம் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. அது இந்திய தேசத்தின் பகிரப்பட்ட பாரம்பரியம். உண்மையில் அது முழு மனிதகுலத்தின் பகிரப்பட்ட பாரம்பரியம். ஒரே பாரதம்; உன்னத பாரதம் என்ற உணர்வை மேலும் வலுப்படுத்தக் கூடியதாக பொங்கல் போன்ற பண்டிகைகள் உள்ளன.

பொங்கல் இன்று உலகளாவிய பண்டிகையாக மாறியுள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தினரும், தமிழ் கலாச்சாரத்தைப் போற்றுபவர்களும் இதை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடுகிறார்கள். நானும் அவர்களில் ஒருவன்.

இந்த சிறப்புமிக்க பண்டிகையை உங்கள் அனைவருடனும் கொண்டாடுவதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். நமது வாழ்வில் பொங்கல் ஒரு இனிமையான அனுபவம் போன்றது. இது நமக்கு உணவை வழங்கும் விவசாயிகளின் கடின உழைப்பை பிரதிபலிக்கிறது, பூமிக்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கிறது. அதேநேரத்தில், இந்த திருவிழா இயற்கை, குடும்பம், சமூகம் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்கான வழியை நமக்குக் காட்டுகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படும் லோஹ்ரி, மகர சங்கராந்தி, மாக் பிஹு போன்ற பண்டிகைகளாலும் தற்போது நாட்டில் உற்சாகம் நிலவுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் வாழும் அனைத்து தமிழ் சகோதர சகோதரிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்தார்.

இவ்விழாவில், நாட்டியம், இசை உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



வாசகர்கள், படைப்பாளிகள், விளம்பரதாரர்கள மற்றும் அனைவருக்கும் இனிய **பொங்கல்** நல்வாழ்த்துகள்

இன்று விடுமுறை வழக்கம்போல் 17.01.2025 அன்று இதழ் வெளிவரும்

## இன்றைய நாள்

வியாழக்கிழமை (15-01-2026)
விசுவாவசு ஆண்டு, தை -1
பிறை: தேய்பிறை
திதி
துவாதசி இரவு 09.45 வரை பிறகு திரயோதசி
நட்சத்திரம்: கேட்டை (முழுவதும்)
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30-3.00 மணி
எமகண்டம்
காலை 6.00 – 7.30 மணி
சூலம் – தெற்கு
நல்ல நேரம் :
காலை 9-10 மணி
மாலை 4 -5 மணி

| | |
|---|---|
| மேஷம் | அனுகூலம் |
| ரிஷபம் | இன்பம் |
| மிதுனம் | சாந்தம் |
| கடகம் | சிந்தனை |
| சிம்மம் | பாராட்டு |
| கன்னி | ஆக்கம் |
| துலாம் | மகிழ்ச்சி |
| விருச்சிகம் | கவனம் |
| தனுசு | நற்செயல் |
| மகரம் | உவகை |
| கும்பம் | மகிழ்ச்சி |
| மீனம் | உயர்வு |

# உ.பி. மகாமேளா: சங்கமத்தில் 9 லட்சம் பக்தர்கள் புனித நீராடல்

**பிரயாக்ராஜ், ஜன.15:**



உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் ஆண்டுதோறும் மகாமேளா நடத்தப்படுகிறது. இந்த மகாமேளா காலத்தில் அங்கு புனித நதியான கங்கை நதியிலும், திரிவேணி சங்கமத்திலும் பெருந்திரளானோர் புனித நீராடுவது வழக்கம். இதன்படி, கடந்த 3-ந்தேதி பிரயாக்ராஜில் பவுர்ணமி தினத்தில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடல் தொடங்கியது.

இந்த மகாமேளா பிப்ரவரி 15-ந்தேதி வரை 44 நாட்கள் நடைபெறுகிறது. முதல் நாளில் புனித நீராடுவதற்காக லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டனர். இதேபோன்று கங்கை நதியிலும் புனித நீராடினர். இதில், ஜனவரி 15 (மகர சங்கராந்தி), ஜனவரி 18 (மவுனி அமாவாசை), ஜனவரி 23 (வசந்த பஞ்சமி), பிப்ரவரி 1 (மகி பூர்ணிமா) மற்றும் பிப்ரவரி 15 (மகா சிவராத்திரி) ஆகியவை புனித நீராடல் செய்வதற்கான முக்கிய நாட்கள் ஆகும்.இந்நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மகர சங்கராந்தி கொண்டாட்டங்கள் இன்று காலை தொடங்கின. இதனை முன்னிட்டு அதிகாலையிலேயே பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு கங்கை நதியிலும், திரிவேணி சங்கமத்திலும் புனித நீராடினர்.

இதில், காலை 6 மணி நிலவரப்படி, 9 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கங்கையிலும், திரிவேணி சங்கமத்திலும் புனித நீராடினர். உத்தர பிரதேசத்தில் மகர சங்கராந்தி கொண்டாட்டம் இன்று தொடங்கும்.

# பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.15000 ஆக உயர்வு

## அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவிப்பு



**சென்னை,ஜன.15:**

பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.12,500-ல் இருந்து ரூ.15000 ஆக உயர்த்தப்படுவதாகவும், மே மாதத்தில் மட்டும் ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களில் உடற்கல்வி 3700 பேர், ஓவியம் 3700 பேர், கணினி அறிவியல் 2 ஆயிரம் பேர், தையல் 1700 பேர், இசை 300, தோட்டக்கலை 20, கட்டிடக்கலை 60, வாழ்க்கைக்கல்வி 200 பேர் பணிபுரிகின்றார்கள்.

இவர்கள், போனஸ், மருத்துவக் காப்பீடு, வருங்கால வைப்பு நிதி, இறந்தோர் குடும்பத்திற்கு நிவாரணம், ஓய்வூதியம் உள்பட அரசின் சலுகைகள் இல்லாமல் பணிபுரிகின்ற தற்காலிக வேலையை நிரந்தரமாக்கவும், தற்போதைய ரூபாய் 12,500 தொகுப்பூதியத்தை மாற்றி காலமுறை சம்பளமாக வழங்க வலியுறுத்தியும் ஜனவரி 8-ம் தேதி முதல்போராட்டத்தை சென்னை பள்ளிக்கல்வித்துறை வளாகத்தில் நடத்தி வருகின்றார்கள்.

போராட்டக் களத்தில், திமுக தேர்தல் வாக்குறுதி 181-ல் சொன்னபடி முதல்வர் ஸ்டாலின் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என அவர்கள் ஓங்கி முழங்கி வந்தனர்.

“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ரூ.35 ஆயிரம் கோடி, பொங்கல் போனஸ், பொங்கல் பரிசி வழங்க ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் சுமார் ரூ.300 கோடி நிதி ஒதுக்கி பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

இதை அரசு கொள்கை முடிவாக திமுக தேர்தல் வாக்குறுதி 181-ஐ அரசாணையிட்டு பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்து, பொங்கல் போனஸ் வழங்கி முதல்வர் இதனை பொங்கல் பண்டிகை பரிசாக அறிவிக்க வேண்டும்.” என்று போராடிய ஆசிரியர்கள் கோரினர்.

> பொங்கல் பரிசி வழங்க ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் சுமார் ரூ.300 கோடி நிதி ஒதுக்கி பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். ”

இந்நிலையில், நேற்று (ஜன.14) காலை, அமைச்சர் அன்பில் மகேஸ் பகுடிநேர ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முகாம் அலுவலகத்தில் காலை 11 மணியளவில் இந்த பேச்சுவார்த்தைநடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், ”முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் பகுதிநேர ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் பட்டுள்ளது.

எஸ்எஸ்ஏ திட்டத்தில் ரூ.3,548 கோடி மத்திய அரசிடம் இருந்து வரவேண்டியுள்ளது. அனால் மத்திய அரசு அதைத் தொடர்ந்து தர மறுக்கிறது. எனினும் ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் உறுதுணையாக அரசு இந்த செலவினங்களை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

தற்போது ஆசிரியர்களின் போராட்டம் எனக்கு கனத்த இதயத்தைத் தருகிறது என்று முதல்வரிடம் கூறினேன். பொங்கல் பண்டிகை நாளில் மகிழ்ச்சி என்பது வார்த்தையில் மட்டும் இல்லாமல் அவர்களுக்கு உண்மையாகவே மகிழ்ச்சி இருக்க வேண்டும் என்று விரும்பி அவர்களுக்கான ஊதியம் மேலும் ரூ.2500 உயர்த்தப்படுகிறது.

அதன்படி பகுதிநேர ஆசிரியர்களின் ஊதியம் ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மேலும் மே மாதத்தில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலையில் இனி மே மாதத்தில் ரூ.10 ஆயிரம் ஊதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஊடே இத்தனை காலத்தில் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் குடும்பத்துக்கு அரசு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர். அது குறித்து முதல்வரிடம் பேசியுள்ளேன். மருத்துவக் காப்பீடு தொடர்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர்.

அதேபோல், பணி நிரந்தரம் என்பது அவர்களின் பிரதான கோரிக்கை. அது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும்.” என்றார்.

# ஆர்எஸ்எஸ் பொதுச்செயலருடன் சீன கம்யூ. பிரதிநிதிகள் சந்திப்பு



**புதுடெல்லி, ஜன.15:**

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் இந்தியா வந்துள்ளனர். சர்வதேசத் துறை துணை அமைச்சர் சன் ஹையான் தலைமையிலான இக்குழுவினர் நேற்று முன்தினம் டெல்லியில் பாஜக தலைமை அலுவலகத்துக்கு வருகை தந்தனர். இக்குழுவில் இந்தியாவுக் கான சீனத் தூதர் சூ ஃபெய்ஹாங்கும் இடம் பெற்றிருந்தார். இந்நிலையில் சீன கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் நேற்று காலை 11 மணிக்கு டெல்லியில் உள்ள ஆர்எஸ்எஸ் அலுவலகம் சென்று அதன் பொதுச் செயலாளர் தத்தாத்ரேயா ஹோசபலை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.

# நாட்டு மக்களுக்கு தமிழில் பொங்கல் வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி

**புதுடெல்லி, ஜன.15:**

நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி தமிழில் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்,

இதுதொடர்பாக அவர் நாட்டு மக்களுக்கு இ-மெயில் மூலம் அனுப்பி உள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

மதிப்பிற்குரியவர்களுக்கு, வணக்கம்! பொங்கல் திருநாளை முன்னிட்டு தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதனின் உழைப்பிற்கும், இயற்கையின் இசைவிற்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை இந்த சிறப்புவாய்ந்த பண்டிகை நமக்கு நினைவூட்டுகிறது. வேளாண்மை, கடினமாக உழைக்கும் நமது விவசாயிகள், கிராமப்புற வாழ்க்கைமுறை மற்றும் கண்ணியமான




வேலை ஆகியவற்றுடன் இந்தப் பண்டிகை ஆழமாக பிணைந்துள்ளது.

குடும்பத்ினர் ஒன்றிணைந்து, பாரம்பரிய உணவுகளை சமைத்து, மகிழ்ச்சியையும் அன்பையும் பகிர்ந்துகொள்கின்றனர். இதன் மூலம், தலைமுறைகளைக் கடந்து, உறவுகள் வலுப்பெறுவதுடன், ஒற்றுமை உணர்வு மேலோங்குகிறது. தங்களது கடின உழைப்பின் மூலம் நமது வாழ்க்கையை செம்மைப்படுத்துவோருக்கு நன்றி தெரிவிக்கும் திருநாளாகவும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

வளமான தமிழ் பாரம்பரியங்களின் உன்னதமான அடையாளமாக பொங்கல் பண்டிகை திகழ்கிறது. உலகின் பழமையான மொழியான தமிழின் தாயகமாக இந்தியா திகழ்வதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

பொங்கல் பண்டிகை, சர்வதேசத் திருவிழாவாகக் கொண்டாடப்படுவது மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் மட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களாலும் இந்தப் பண்டிகை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

மீண்டும் உங்களுக்கு இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தைத்திருநாள், அனைவரின் வாழ்விலும் அபரிமிதமான செழிப்பு, வெற்றி மற்றும் நல்ல ஆரோக்கியத்தை கொண்டுவரட்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 19-ம் தேதி டெல்லியில் மீண்டும் ஆஜராக விஜய்க்கு சிபிஐ சம்மன்

**சென்னை, ஜன.15:** டெல்லியில் விஜய்யிடம் சிபிஐ அதிகாரிகள் நடத்திய முதல்கட்ட விசாரணை முடிந்த நிலையில் நேற்று அவர் சென்னை திரும்பினார். அவர் அடுத்தகட்ட விசாரணைக்காக பொங்கல் பண்டிகை முடிந்த பிறகு ஜன.19-ம் தேதி டெல்லியில் மீண்டும் ஆஜராகுமாறு சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது.

கரூரில் நடைபெற்ற விஜய் பிரச்சார நிகழ்ச்சியின்போது நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து சிபிஐ விசாரித்து வருகிறது.

இதன்படி தவெக பொதுச் செயலாளர் என்.ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா மற்றும் இணை பொதுச்செயலாளர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் ஆகியோர் டெல்லி சிபிஐ அலுவலகத்தில் ஆஜராகி ஏற்கெனவே விளக்கம் அளித்திருந்தனர்.

இதைத்தொடர்ந்து, கட்சியின் தலைவர் விஜய்க்கு சிபிஐ சம்மன் அனுப்பியது. அதன்படி, நேற்று முன்தினம் டெல்லியில் அதிகாரிகள் முன்னிலையில் அவர் ஆஜரானார்.



சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. தொடர்ந்து, நேற்றும் (ஜன.13-ம் தேதி) ஆஜராகுமாறு விஜய்க்கு அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

ஆனால், 'ஜனநாயகன்' திரைப்பட வெளியீடு தொடர்பான ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களைக் கூறி, அடுத்த வாரம் ஆஜராவதாக விஜய் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை ஏற்ற அதிகாரிகள், அடுத்தக்கட்ட விசாரணைக்கான தேதியை இன்னும் ஓரிரு நாட்களில் சம்மன் மூலம் தெரிவிப்பதா கூறினர்.

இந்நிலையில், டெல்லியில் தங்கியிருந்த விஜய், நேற்று பிற்பகல் 1 மணி அளவில் தனது நிர்வாகிகளுடன் விமானம் மூலம் சென்னை திரும்பினார். அப்போது சென்னை விமான நிலையத்தில் சிடிஆர்.நிர்மல்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஜன.13-ம் தேதி (நேற்று) சிபிஐ விசாரணை தொடர வேண்டியிருந்தது.

இருப்பினும், பொங்கல் பண்டிகை, 'ஜனநாயகன்' திரைப்படப் பணிகள் மற்றும் கட்சி சார்ந்த முக்கிய ஆலோசனைகள் இருப்பதால், வேறொரு தேதியில் விசாரணையை வைத்துக்கொள்ள விடுத்த கோரிக்கையை அதிகாரிகள் ஏற்றனர்.

இதனால் அடுத்தவாரம் விஜய் மீண்டும் ஆஜராகி விளக்கம் தர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

கரூர் சம்பவத்தின்போது 607 காவலர்கள் பாதுகாப்பு பணியில் இருந்ததாக பேரவையில் முதல்வர் ஸ்டாலின் கூறியிருந்தார். ஆனால், அப்போதையை சட்டம் ஒழுங்கு- கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் கூறும்போது, 500 காவலர்கள் இருந்ததாகக் தெரிவித்துள்ளார். ஒரு சாதாரண எண்ணிக்கையிலேயே இவ்வளவு முரண்பாடுகள் இருக்கும்போது, உண்மை நிலை எப்படி இருக்கும்.

தமிழக அரசு மற்றும் காவல்துறையின் தொடர் தவறுகளே கரூர் சம்பவத்துக்குக் காரணம். இதற்கான ஆதாரங்களையும் சிபிஐ-யிடம் சமர்ப்பித்துள்ளோம். குறிப்பாக, உயிரிழந்தவர்களின் பிரேதப் பரிசோதனையில் பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளன.

மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை மிரட்டி, கையெழுத்து வாங்கியதாக பல புகார்கள் வந்ததுள்ளன. இதுகுறித்து விரிவான விசாரணை நடத்துவதாக சிபிஐ அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

ஜனநாயகன் திரைப்படம் அமைதியான முறையில் வெளியாக வேண்டும் என மக்கள் விரும்புகிறார்கள். படம் வெளியீடு தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு எங்கள் அடுத்தகட்ட முடிவை அறிவிப்போம். எங்கள் நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

இதனிடையே விஜய் மீண்டும் வரும் 19-ம் தேதி சிபிஐ முன்பு ஆஜராகுமாறு நேற்று சம்மன் அனுப்பப்பட்டது. இதேபோல் தமிழக காவல் அதிகாரிகளும் ஆஜராக அறிவுறுத்தப்பட்டதாக தெரிகிறது.

## கல்லூரி மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்குவது ஏன்.?

### உதயநிதி ஸ்டாலின் விளக்கம்



**சென்னை, ஜன.15:** சென்னை அண்ணா சாலை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்கான "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ் 898 மாணவிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் லேப்டாப்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது;

"உங்களையெல்லாம் சந்தித்து, இன்றைக்கு இந்த மடிக்கணினியை வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். காயிதே மில்லத் கல்லூரி மாணவிகள் உங்களிடம் மிகவும் பிடித்த விசயம் என்னவென்றால், உங்களுடைய சமூக அக்கறை. கல்லூரிக்கு வந்தோம், படித்தோம், டிகிரி வாங்கினோம், வீட்டுக்கு சென்றோம், வேலைக்கு சேர்ந்தோம் என்றில்லாமல் சமூக நலன் சார்ந்த பல்வேறு விசயங்களுக்காக தொடர்ந்து குரல் கொடுக்கக்கூடியவர்கள்தான் இந்த காயிதே மில்லத் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் நீங்கள்.

லேப்டாப் திட்டத்தை பற்றி உங்களுக்கே தெரிந்திருக்கும். இதை முன்பு, சென்ற ஆட்சியாளர்கள் பள்ளிக்கூடம் படிக்கின்ற குழந்தைகளுக்கு கொடுத்து கொண்டிருந்தார்கள். அதன் பிறகு 2019 ஆம் ஆண்டு இந்த திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். மீண்டும் இந்த திட்டத்தை தொடங்க வேண்டும் என்று எல்லோரும் சொல்லும் போது, பள்ளி மாணவர்களுக்கு கொடுப்பதை விட கல்லூரி மாணவர்களுக்கு கொடுக்கும்போது அவர்களுக்கு படிப்பிற்கும் இது உதவியாக இருக்கும். அவர்கள் எங்கு வேலைக்கு சென்றாலும் உயர்கல்விக்கு உதவியாக இருக்கும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார். அவர்களுக்கு பெரிய நிறுவனங்களில் வேலை கிடைப்பதற்கும் உதவியாக இருக்கும் என்று இந்த திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் தொடங்கி வைத்தார்கள்.

இந்த கல்விக்கான நிதியை நம்முடைய திராவிட மாடல் அரசு வெறும் செலவாக பார்க்கவில்லை. நம்முடைய தமிழ்நாடு மாணவர்களுடைய வளர்ச்சிக்கான முதலீடாகதான் நம்முடைய அரசு பார்க்கின்றது. பெண்களுடைய கைகளில் இருக்கக்கூடிய சமையில் கரண்டியை பிடுங்கி, அவர்கள் கையில் புத்தகத்தை கொடுக்க வேண்டும் என்று தந்தை பெரியார் சொன்னார்.

நம்முடைய முதலமைச்சர், புத்தகத்தை மட்டுமல்ல, இன்றைக்கு லேப்டாப்களையும் சேர்த்து உங்கள் கைகளில் ஒப்படைத்துள்ளார். ஏனென்றால், பெண்களுக்கு கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தவர் நம்முடைய முதலமைச்சர். பெண்களுடைய கல்வியை ஊக்கப்படுத்த வேண்டும் என்றுதான் முதலமைச்சர், புதுமைப் பெண் திட்டத்தை தொடங்கி வைத்தார். அந்த திட்டத்தை பற்றி உங்களுக்கு தெரியும். அரசு பள்ளியில் படித்து, கல்லூரியில் படிப்பதற்கு, எந்த கல்லூரியாக, அது தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி பெண்கள் படிக்க வேண்டும் என்று அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத் தொகை நான் தருகிறேன் என்று இன்றைக்கு புதுமைப் பெண் திட்டத்தை நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது.

பெரிய, பெரிய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு நிச்சயம் இந்த லேப்டாப் உங்களுக்கு உதவியாக இருக்கும். லேப்டாப்பை யுடியூப் பார்ப்பதற்கு, படம் பார்ப்பதற்கு மட்டும் உபயோகப்படுத்தாமல், தயவு செய்து இந்த லேப்டாப்பை உங்களுடைய கல்விக்கு ஆக்கபூர்வமாக பயன்படுத்துங்கள் என்று இந்த நேரத்தில் ஒரு அன்பான கோரிக்கையை வைத்துக் கொள்கிறேன். உங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்காக இதை பயன்படுத்துங்கள். எதை கொடுத்தாலும் அதை பாதுகாத்து பன்மடங்கு ஆக்கக்கூடிய ஆற்றல் பெண்கள் ஆகிய உங்களுக்கு உண்டு. அந் தவகையில் இன்றைக்கு உங்கள் கைகளில் கொடுக்கப்படுகின்ற இந்த லேப்டாப் எதிர்காலத்தில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வளர்ச்சியாக பெருகும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்."

இவ்வாறு அவர் பேசினார்.

## இன்ஸ்டாவில் பழக்கம்: விடுதியில் அறை எடுத்த கள்ளக்காதலன்... உல்லாசமாக இருக்கும்போது வெடித்த மோதல்

**சேலம், ஜன.15:** சேலம் மாவட்டம் ஏற்காட்டில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் நேற்று இரவு சுமார் 35 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு பிணமாக கிடந்தார். இதுபற்றி ஏற்காடு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்து பார்வையிட்டனர். அப்போது பிணமாக கிடந்த பெண் மேலாடை இல்லாமல் கொலை செய்யப்பட்டு கிடப்பது தெரியவந்தது.

இதனையடுத்து போலீசார் தங்கும் விடுதி ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர். அப்போது அவர்கள் நேற்று மதியம் 1 மணியளவில் கொலை செய்யப்பட்ட பெண்ணும் அவருடன் 30 வயது மதிக்கத்தக்க ஆணும் வந்து அறை எடுத்து தங்கினர் என்றும், அவர்கள் உணவுக்கு கூட அறையை விட்டு வெளியில் வரவில்லை என்பதும் தெரிய வந்தது.

மேலும் அந்த பெண்ணுடன் தங்கிய வாலிபர் மட்டும் நேற்று மாலை சுமார் 6 மணியளவில் தங்கும் விடுதியை விட்டு வெளியே சென்றது சிசிடிவி கேமராவில் பதிவாகி உள்ளது. அதன்பின் அவர்கள் தங்கியிருந்த அறை பூட்டியே கிடந்தது. சந்தேகத்தின் அடிப்படையில் தங்கும் விடுதி ஊழியர்கள் அறையை திறந்துபார்த்தபோது அந்தபெண் கொலை செய்யப்பட்டு கிடப்பது தெரியவந்தது.

இதனையடுத்து போலீசார் கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கொலை செய்யப்பட்ட பெண் மற்றும் அவருடன் தங்கிய வாலிபர் குறித்து தீவிர விசாரணையில் இறங்கினர். அப்போது போலீஸ் விசாரணையில் பரபரப்பு தகவல்கள் வெளியானது.





கொலை செய்யப்பட்ட பெண் தர்மபுரி மாவட்டம் ஏரியூர் அருகே உள்ள ஏர் கோலபட்டி பகுதியை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரது மனைவி சாலா (வயது 33) என்று தெரிய வந்தது. மேலும் இவர்களுக்கு 15 வயதில் ஒரு மகன், 13 வயதில் ஒரு மகள் இருப்பது தெரிய வந்தது. சாலா தனது கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவரைவிட்டு பிரிந்து தனது 2 குழந்தைகளுடன் தாய் வீட்டில் வசித்து வந்தார். அப்போது இவருக்கும் சேலம் மாவட்டம் இளம்பிள்ளை தெப்பக்குட்டை பகுதியை சேர்ந்த கோவிந்தசாமி என்பவர மகன் பார்த்திபன் வயது 35 என்பவருக்கும் இன்ஸ்டா மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பார்த்திபன் என்பவர் எலெக்ட்ரீசியன் வேலை பார்த்து வருகிறார். மேலும் இவருக்கும் திருமணமாகி விட்டது.

இந்தநிலையில் இளம் பெண் சாலாவும் , பார்த்திபனும் கடந்த 4 ஆண்டுகளாக சமூக வலைதளங்களில் ஏற்பட்ட பழக்கத்தால் பழகி வந்துள்ளனர். அப்போது அவர்களுக்குள் கள்ளத்தொடர்பு ஏற்பட்டது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சாலா, பார்த்திபன் ஆகியோர் நேற்று ஏற்காடுக்கு வந்து அறை எடுத்து தங்கி உள்ளனர். அப்போது இருவரும் உல்லாசமாக இருந்துள்ளனர். அப்போது சாலா பார்த்திபனிடம் உல்லாசம் மட்டும் அனுபவிக்கிறாயே..பணம் எங்கே என்று கேட்டுள்ளார். பணம் ஊருக்கு போய் அனுப்பி விடுகிறேன் என்று கூறியுள்ளார். தொடர்ந்து பணம் தந்தால் தால் நாம் மீண்டும் உல்லாசமாக இருக்க முடியும் என்று சாலா கூறியுள்ளதாக கூறப்படுகிறது.

இதனை தொடர்ந்து இருவருக்கும் தகராறு வெடித்துள்ளது. ஏற்காட்டில் விடுதி அறை எடுத்தது வீணாகிவிடுமோ என நினைத்த பார்த்திபன் சாலாவிடம் சமாதானம் செய்ய முயன்றார். சாலா பணம் கேட்பதிலேயே குறியாக இருந்துள்ளார். இந்தநிலையில், ஆத்திரம் அடைந்த பார்த்திபன் கழுத்தை நெரித்து சாலாவை கொலை செய்துவிட்டு தப்பி சென்றது தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் இளம்பிள்ளைக்கு விரைந்து சென்று வீட்டில் பதுங்கி இருந்த பார்த்திபனை லாவகமாக கைது செய்து ஏற்காடு போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். அவரிடம் போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## போகிப்பண்டிகை: சென்னையில் 8 விமானங்கள் ரத்து - 7 விமானங்களின் நேரம் மாற்றியமைப்பு

**சென்னை, ஜன.15:** போகிப்பண்டிகை இன்று (புதன்கிழமை) கொண்டாடப்படுகிறது. எனவே சென்னை விமான நிலையத்தை சுற்றியுள்ள மீனம்பாக்கம், கவுல்பஜார், பொழிச்சலூர், பம்மல், அனகாபுத்தூர், தரைப்பாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், பரங்கிமலை, பழவந்தாங்கல் உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளில் அதிகாலையிலேயே பழைய பிளாஸ்டிக் கழிவுகள், டயர்கள் உள்ளிட்ட பழைய பொருட்களை தெருக்களில் போட்டு எரித்ததால் கடுமையான புகைமூட்டம் ஏற்பட்டுள்ளது.

பனி மூட்டத்துடன் புகையும் சேர்வதால் விமான நிலைய ஓடுபாதையே தெரியாத அளவுக்கு மாறிவிடுவதால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சென்னையில் இருந்து காலை 7.15 மணிக்கு மும்பை செல்லும் விமானம், காலை 8 மணிக்கு டெல்லி செல்லும் விமானம், அதிகாலை 3.05 மணிக்கு புனே செல்லும் விமானம், காலை 6.35 மணிக்கு கோவை செல்லும் விமானம் என 4 புறப்பாடு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் சென்னைக்கு அதிகாலை 5.20 மணிக்கு வர வேண்டிய டெல்லி விமானம், காலை 6.35 மணிக்கு வரவேண்டிய மும்பை விமானம், காலை 7.10 மணிக்கு வரவேண்டிய புனே விமானம், காலை 9.10 மணிக்கு வரவேண்டிய கோவை விமானம் என 4 வருகை விமானங்களும் என 8 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன.

அதேபோல் சென்னையில் இருந்து காலை 5.40 மணிக்கு விஜயவாடா செல்ல வேண்டிய விமானம் 3 மணி நேரம் தாமதமாக காலை 8.40 மணிக்கும், காலை 6 மணிக்கு தூத்துக்குடி செல்ல வேண்டிய விமானம் 3 மணிநேரம் தாமதமாக காலை 9.05 மணிக்கும், அதிகாலை 3 மணிக்கு அபுதாபி செல்ல வேண்டிய ஏர் அரேபியா விமானம், அதிகாலை 3.50 மணிக்கும், பக்ரைன் செல்ல வேண்டிய கல்ப் விமானம் காலை 4.50 மணிக்கும், காலை 9.35 மணிக்கு மலேசியா செல்ல வேண்டிய ஏர் ஏசியா விமானம் காலை 10.15 மணிக்கும்,

அதிகாலை 2.10 மணிக்கு அபுதாபி செல்ல வேண்டிய எத்தியாட் விமானம் அதிகாலை 3.15 மணிக்கும், காலை 9.30 மணிக்கு அபுதாபி செல்ல வேண்டிய எத்தியாட் விமானம் காலை 10.25 மணிக்கும் புறப்பட்டு செல்லும் வகையில் நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது. இந்த விமானங்கள் தவிர மேலும் பல விமானங்கள் தாமதம் மற்றும் ரத்து ஆகலாம் என்றும், அது குறித்து அந்தந்த ஏர்லைன்ஸ் நிறுவனங்கள் அறிவிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## அரசியல் கார்னர்

### 20-ந்தேதி திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் - துரைமுருகன் அறிவிப்பு




**சென்னை, ஜன.15:** முதல்-அமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. இது தொடர்பாக திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் இன்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

"திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 20-01-2026 (செவ்வாய்கிழமை) மாலை 5.30 மணிக்கு திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னை அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது. அப்போது மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அண்ணாமலைக்கு துணை நிற்போம் - சீமான் எக்ஸ் தள பதிவு



**சென்னை, ஜன.15:** நாம் தமிழகர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

"மண்ணின் மைந்தர்களே மண்ணை ஆள வேண்டும்" என்பதே ஒவ்வொரு தேசிய இனத்தின் இறையாண்மை கொள்கை! ஒவ்வொரு மாநிலத்தின் முதன்மையான உரிமை! அம்முழக்கங்களை முன்வைத்து மராட்டிய மாநில உரிமைக்காக சிவசேனா, போராடுவது 100 விழுக்காடு சரியானதே!

அதேபோன்று மராத்திய மாநிலத்தில் இந்தி திணிப்புக்கு எதிராக போரிடும் சிவசேனா கட்சியின், தாய்மொழி கொள்கையும் 100 விழுக்காடு சரியானதே! தேசிய இனங்களின் உரிமைக்காக போராடும் அனைத்து தேசிய இன மக்களின் கருத்தோடும் உடன்படுகின்றோம். தேசிய இனங்களின் உரிமை மீட்புக்கான போராட்டத்தில் மராத்திய மாநில உரிமைக்காக குரல் கொடுக்கவும், துணை நிற்கவும் தயாராக உள்ளோம்!

ஆனால், மும்பை மாநகராட்சி தேர்தல் பரப்புரையின்போது, அம்மண்ணில் நின்று தமிழ்நாடு பாஜகவின் முன்னாள் தலைவர் தம்பி அண்ணாமலை, 'மும்பை மராத்தியர்களின் நகரம் அல்ல, பன்னாட்டு நகரம்' என்று பேசியது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்; அதை ஏற்பதும், எதிர்ப்பதும் அவரவரின் சனநாயக உரிமை! ஆனால், மும்பைக்கு வந்தால் தம்பி அண்ணாமலையின் கால்களை வெட்டுவேன் என்பதெல்லாம் கடும் கண்டனத்திற்குரியது.

தம்பி அண்ணாமலையின் கருத்தியல், கோட்பாடு அரசியல் நிலைப்பாட்டில் நாங்கள் முற்றிலும் முரண்படுகிறோம். அதற்கு நேர் எதிரான, அரசியலை நாங்கள் முன்னெடுக்கிறோம். இருப்பினும், தம்பி அண்ணாமலையின் கருத்தை கருத்தால் எதிர்கொள்வதற்கு பதிலாக, தம்பி அண்ணாமலை மும்பையில் கால்வைத்தால் வெட்டுவேன் எனும் கொடும்போக்கு ஒரு போதும் ஏற்புடையதல்ல.

அண்ணாமலை ஒரு தனி நபர், ஒரு கட்சியைச்சேர்ந்தவர், குறிப்பிட்ட கொள்கையை ஏற்றவர் என்பதை மட்டும் கருத்தில்கொண்டு பேசுவது ஏற்புடையதல்ல; ராஜ் தாக்கரேவின் வன்முறை பேச்சு தம்பி அண்ணாமலை என்ற தனியொருவரை மட்டும் அவமதிப்பதல்ல; ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அவமதிப்பதாகும்; அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. மக்களை வழிநடத்தும் மதிப்புமிக்கத் தலைவர் பெருமக்கள் வன்முறையை தூண்டும் வகையில் பேசுவது சரியானதல்ல;

கடந்த காலங்களில் ஆந்திர காட்டில் 20 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டபோதும் கேட்க நாதியில்லை; நடுக்கடலில் மீனவர்கள் தமிழர்கள் என்பதால் சுட்டுக்கொல்லப்பட்ட போதும் கேட்க நாதியில்லை; அப்படி ஒரு நிலை தமிழ் மண்ணில் இன்று இல்லை. அண்ணாமலை தனி நபரல்ல; முதலில் அவர் தமிழ்த்தேசிய இனத்தின் மகன்.

தம்பி அண்ணாமலைக்கு கட்சி, அரசியல், கொள்கை, கோட்பாடு அனைத்தையும் கடந்து தமிழ் இனத்தின் மகனாக நாங்கள் துணை நிற்போம். தம்பி அண்ணாமலை குறித்த ராஜ் தாக்கரேவின் வன்முறை பேச்சுக்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கது!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜல்லிக்கட்டுக் காளை வளர்ப்போருக்கு அல்வா கொடுக்கும் திமுக அரசு

#### நயினார் நாகேந்திரன் கண்டனம்



**சென்னை, ஜன.15:** தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஆட்சிக்கு வருவதற்கு முன், ஜல்லிக்கட்டுக் காளைகளை வளர்ப்போருக்கு ஊக்கத்தொகையாகமாதந்தோறும் ரூ. 1000 வழங்கப்படும் என்று திமுகவின் தேர்தல் வாக்குறுதி எண் 373-ல் முழங்கினீர்களே !மாட்டுப் பொங்கலுக்கு இன்னும் 3 நாட்கள் மட்டுமே இருக்கும் வேளையில், இந்த மாதமாவது அந்தத் தொகையைக் காளை வளர்ப்போர் கண்ணில் காட்டுவீர்களா? கடந்த நான்கரை ஆண்டுகளாக மாதந்தோறும் வழங்காமல் ஏமாற்றி வந்த மொத்த தொகையையும் சேர்த்து தலைக்கு ₹55,000 ஆன நிலையில், எப்போது தான் ஜல்லிக்கட்டுக் காளை வளர்ப்போர் ஒவ்வொருவரிடமும் தாங்கள் பட்ட கடனை அடைப்பீர்கள்?

ஜல்லிக்கட்டுக் காளை வளர்ப்போரை நான்கரை வருடங்களாக வஞ்சிக்கும் பாவம் திமுக அரசை சும்மா விடாது! சமத்துவப் பொங்கல் என ஃபோட்டோஷூட் நடத்திவிட்டு, மாதந்தோறும் ஜல்லிக்கட்டுக் காளை வளர்ப்போருக்கு அல்வா கொடுக்கும் திமுக அரசுக்கு ஒட்டுமொத்தமாகக் கடிவாளம் போட்டு அடக்கி வைக்கும் நாள் தொலைவிலில்லை. என தெரிவித்துள்ளார்.


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
CONTACT US!
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


ஸர்வேஜநா சுகிநோபவந்து
சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY
21, North Mada Street, Villivakkam, Chennai – 600 049
PH: 044 26171341 | email: ajanthasupari@hotmail.com


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visit Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


EuroKids
Pre-School
Right Start, Flying Start!
Tondirpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
வைகறையில்
பேப்பர்பாய்
www.paperboy.biz



ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

ஆனந்த பாஸ்கர்
சென்னை ❁ வியாழக்கிழமை ❁ 15.01.2026

## கவிதை அரங்கம்!





முதலில் நீ போராட
வேண்டியது உன்னுடன்
தான் ஏனென்றால் உனக்கு
நடக்கும் அனைத்திற்கும்
முதல் காரணம்
நீ மட்டும் தான்

உன் மனதிலிருக்கும்
அச்சம் தான்
உன் முதல் எதிரி
நீ தயங்கி நிற்கும்
நொடிகள் தான்

உன் முதல் தோல்வி

நீ செல்ல வேண்டிய
உன் வாழ்க்கைப்
பாதைக்கான
விளக்கு நீயே

இலைகள் உதிர்ந்தாலும்
நம்பிக்கையை உதிர்க்காத
மரமாகி உயர்ந்திடு
நின் வாழ்வில்

## வாழ்க்கை தத்துவம்...



தன் மதிப்பே
தன்னை உயர்த்தும்
தன்னம்பிக்கையே
வாழ்க்கையை உயர்த்தும்

பக்குவம் என்பது
காயப்படுத்தியவர்களை
காயப்படுத்த வாய்ப்பிருந்தும்
காயப்படுத்தாமல்
கடந்து செல்வதே

பதிலுக்கு பதில்
பேசுபவர்கள்
அறிவாளிகளும் அல்ல
மௌனமாய்
விலகி நிற்பவர்கள்
முட்டாளும் அல்ல

## மாற்றியவர் யாரோ?




நகரின் பிரபல கல்யாண மண்டபம் அது. பலவித சத்தங்களை உள்வாங்கிக் கொண்டு கலகலப்பை பூசிக் கொண்டிருந்தது.

மணமகள் அறையில் மணப்பெண் அக்ஷயா அப்போதுதான் பியூட்டி பார்லரிருந்து வந்து சேர்ந்திருந்தாள். ஒன்றிரண்டு சின்ன நாகசு வேலைகள் பாக்கி இருக்க, டச்சப்பில் கவனமாக இருந்தாள்..

பெண்ணின் அப்பா மூர்த்தியைக் கூப்பிட்டார் தாய் மாமா நடேசன்..

"அப்பா மூர்த்தி.. மாப்பிள்ளை ரூம்ல ஒரே சத்தமா கேக்குது. என்ன பிரச்சனைன்னு தெரியல.. என்னன்னு பாரு.. மாப்பிள்ளை ஏதோ கோவத்துல கத்துற மாதிரி தெரியுது" என்றார் கவலையோடு.

கவலை மூர்த்தியையும் பற்றிக்கொள்ள, 'என்ன விஷயம் என்று தெரியவில்லையே' என்ற கவலையோடு மாப்பிள்ளை அறையை அணுகினார்.

மாப்பிள்ளை அஜய் கத்திக் கொண்டிருந்தான்.."அப்பா நம்மளை நல்ல ஏமாத்திட்டாங்க. நாம பொண் பார்க்க வந்த போது பார்த்த பொண்ணு இல்ல இவ.. இப்ப நான் காரில் இருந்து இறங்கி ரூமுக்குள்ள போறத பார்த்தேன். கண்டிப்பா இவ வேற பொண்ணு. நாம அன்னைக்கு பார்த்த பொண்ணு இல்ல" என்றான் ஆணித்தரமாக.

"என்னப்பா இப்படி சொல்ற.. அது எப்படி பொண்ணை மாத்துவாங்க "என்றார் அவன் அப்பா..

மூர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை. அவருக்கு இருப்பது ஒரே மகள் அக்ஷயா. அது எப்படி பெண் மாறி இருப்பதாக மாப்பிள்ளை சொல்லுகிறார்? மனம் தடுமாறி நின்றார்.

இந்த சத்தம் கேட்டு மணமகள் அறை கதவு திறக்க அக்ஷயா வெளியே வந்தாள். திகைத்து நின்ற அப்பாவின் மூலம் விஷயத்தை தெரிந்து கொண்டவள்.. மாப்பிள்ளை அறைக்கதவை தட்டினாள்..

"இப்ப என்ன மாப்பிள்ளை சார்.. அன்னைக்கு நீங்க பார்த்த பொண்ணு வேணும் அவ்வளவுதானே.கொஞ்சம் பொறுங்கள் " என்றவள், தன் அறைக்கு வந்து அறைக்கதவை அடைத்துக் கொண்டாள்.

தலைமுடியை இயல்பாக சீவி, மேக்கப்பை குறைத்துக் கொண்டு, முகத்தை இயல்புக்கு கொண்டு வந்த பிறகு மாப்பிள்ளை அறையின் கதவை தட்டினாள்.

அஜய் சந்தோஷமாக "இதுதான் அக்ஷயா நாம பார்த்த பொண்ணு" என்றான் அப்பாவிடம்..

"இப்ப திருப்தி தானே மாப்பிள்ளை சார்.. இனி ரெடியாகுங்க நானும் பத்து நிமிஷத்துல ரெடியாகி மணமேடைக்கு வந்துடறேன்" என்று சிரித்துக் கொண்டே தன்னறைக்குள் சென்றாள் அக்ஷயா.

தனக்கு மேக்கப் போட்டுவிட்ட பியூட்டி பார்லர் பெண்ணை மனதார திட்டியபடி..

**தி.வள்ளி,**
திருநெல்வேலி.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*காதல் எங்கே பிறந்தது என்று தெரியுமா?......*

*சீனாவுல தான் பிறந்தது.....*

*ஏனென்றால் ANYTHING MADE IN CHINA IS NO GURANTEE & NO WARRANTY!*



## தினம் ஒரு சமையல்



### நிலக்கடலைத் துவையல்

தேவையான பொருட்கள்:

1. தோல் நீக்கி வறுத்த நிலக்கடலை - 250 கிராம்
2. பூண்டு - 10 பல்
3. புளி - சிறிது அளவு
4. மிளகாய் - 2
5. சின்ன வெங்காயம் - 2
6. உப்பு - சிறிதளவு



தாளிக்க:

1. எண்ணெய் - ஒரு டேபிள் ஸ்பூன்
2. கடுகு, உளுந்து - அரை டீஸ் ஸ்பூன்
3. கறிவேப்பிலை சிறிதளவு

செய்முறை:

1. நிலக் கடலையை நீர் சேர்த்து அரைத்து, பிற பொருட்களுடன் சட்னி பதத்தில் அரைத்து, தாளித்து இறக்கினால் சுவையான நிலக்கடலைத் துவையல் ரெடி.

## கீழா நெல்லி பயன்கள்



கீழா நெல்லி முழுத் தாவரமும் மருத்துவத்தில் பயன்படுகின்றது. இலைகளில் கசப்புச் சுவை கொண்ட பில்லாந்தின் என்கிற செயல்படும் மூலப் பொருள் காண்ப்படுகின்றது. மேலும், தாவரம் முழுவதும் பொட்டாசியம் சத்து மிகுதியாக உள்ளது.

கீழா நெல்லி சிறுநீர் பெருக்கும்; விஷத்தை முறிக்கும்; இரத்த சோகையை குறைக்கும்; இரத்தத்தில் உள்ள நுண் கிருமிகளைக் கொல்லும்; பசி உண்டாக்கும்; காய்ச்சல் போக்கும்.

கீழா நெல்லி சிறு செடி வகையைச் சார்ந்தது. கீழா நெல்லி இலைகள், சிறியவை. கூட்டிலை வடிவமானவை. இரு வரிசையாக அமைந்தவை.

கீழா நெல்லி இலைகளைத் தாங்கிப் பிடிக்கும் முக்கிய நடு நரம்பின் கீழ்ப் பாகம் முழுவதும் கீழ் நோக்கிய பசுமையான சிறு பூக்களும் காய்களும் தொகுப்பாகக் காணப்படும். இதனாலேயே கீழாநெல்லி என்றப் பெயர் பெற்றது.

ஈரமான இடங்கள், வயல் வரப்புகள், பாழ் நிலங்களில் சாதாரணமாக காணப்படுகின்றது. கீழ்க்காய் நெல்லி, கீழ் வாய் நெல்லி ஆகிய மாற்றுப் பெயர்களும் இந்த தாவரத்திற்கு உண்டு.

கீழா நெல்லி முழுத் தாவரத்தையும் பசுமையாக சேகரித்து நன்கு சுத்தம் செய்து மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். இதில் எலுமிச்சம் பழ அளவு ¼ லிட்டர் வெண்ணெய் நீக்கிய மோருடன் கலந்து குடித்து வர மஞ்சள் காமாலை, நீரழிவு நோய் குணமாகும். இந்தக் காலத்தில் உணவு கட்டுப்பாடு அவசியம்.

குறிப்பு: பசுமையான கீழாநெல்லி தினமும் கிடைக்கப் பெறாதவர்கள் செடியை காய வைத்து தூள் செய்து பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு ½ டீஸ்பூன் அளவு தேவையான அளவு மோரில் கலக்கி உட் கொண்டு வரலாம்.

கீழா நெல்லி வேரை அரைத்து பசும்பாலுடன் கலந்து, காலை, மாலை 3 நாட்கள் கொடுக்க உடல் சூடு குறைந்து குளிர்ச்சி பெறும். விஷக் கிருமிகளால் ஏற்படும் தொற்று நோய்களை விலக்குவதற்கான மருந்தாகவும் இதனைப் பயன்படுத்தலாம்.

ஒரு கைப்பிடி அளவு கீழாநெல்லி இலையை நசுக்கி, அதனை இரண்டு டம்ளர் நீரில் இட்டு பாதியாக சுண்டக் காய்ச்சி வடிகட்டி, காலை, மாலை இரு வேளைகளும் குடிக்க வெள்ளைபடுதல் தீரும்.


வயிற்றுப் புண் குணமாக ஒரு கைப்பிடி அளவு கீழா நெல்லி இலையை அரைத்து, 1 டம்ளர் மோரில் கரைத்து காலையில் குடித்து வரவேண்டும்.

தேவையான அளவு கீழா நெல்லி இலைகளை அரைத்து காயத்தின் மீது வைத்துக் கட்ட காயங்கள் குணமாகும்.

எலிக்கடி விஷம் குணமாக ஒரு பிடி கீழா நெல்லி இலைகளை எடுத்து 100 மிலி நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி, காய்ச்சிய எண்ணெயை கடி வாயில் தடவ வேண்டும். காய்ச்சி வறுத்த இலையை உட் கொள்ள வேண்டும். தொடர்ந்து 3 நாட்கள் காலை வேளைகளில் வெறும் வயிற்றில் இவ்வாறு சாப்பிட வேண்டும்.




## மன ஷங்கர வர பிரசாத் காரு படத்தின் முதல் நாள் வசூல்.. எவ்வளவு தெரியுமா




மன ஷங்கர வர பிரசாத் காரு மெகா ஸ்டார் சிரஞ்சீவி நடிப்பில் இயக்குநர் அனில் ரவிபுடி இயக்கத்தில் உருவாகி பொங்கல் ஸ்பெஷலாக வெளிவந்திருக்கும் படம் மன ஷங்கர வர பிரசாத் காரு.

இப்படத்தில் நடிகை நயன்தாரா கதாநாயகியாக நடித்திருந்தார். மேலும் நடிகர் வெங்கடேஷ், கேத்ரின் தெரசா, விடிவி கணேஷ் என பலரும் நடித்திருந்தனர்.

நேற்று திரையரங்கில் வெளிவந்த இப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்தது. சிரஞ்சீவியின் கம்பேக் என பலரும் கூறி வருகிறார்கள்.

இந்த நிலையில், மன ஷங்கர வர பிரசாத் காரு படத்தின் முதல் நாள் வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் ரூ. 70+ கோடி வசூல் செய்துள்ளது.



நடிகை பிரியங்கா திருமண லுக்கில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதோ நீங்களே பாருங்க..

## ரிலீஸுக்கு முன் வா வாத்தியார் படத்திலிருந்து வெளிவந்த காட்சி.. அட, இதுவே சூப்பரா இருக்கே



இயக்குநர் நலன் குமாரசாமி இயக்கத்தில் கார்த்தி நடிப்பில் உருவாகியுள்ள படம் வா வாத்தியார். இப்படத்தில் க்ரித்தி ஷெட்டி, ராஜ்கிரண், ஆனந்த்ராஜ், வடிவுக்கரசி, சத்யராஜ் என பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

கடந்த ஆண்டே இப்படம் வெளிவரவிருந்த நிலையில், சில பணப் பிரச்சனை காரணமாக படத்தின் ரிலீஸ் தள்ளிப்போனதாக கூறப்படுகிறது. தற்போது பிரச்சனைகள் அனைத்தும் முடிவுக்கு வந்து படம் நாளை வெளிவரவுள்ளது.

இந்த நிலையில், வா வாத்தியார் படத்திலிருந்து காட்சி ஒன்றை Sneak Peak வீடியோவாக படக்குழு வெளியிட்டுள்ளது. சுவாரஸ்யமாக அமைந்துள்ள இந்த காட்சி படத்தின் மீதான எதிர்பார்ப்பை இன்னும் அதிகரித்துள்ளது.

இதோ நீங்களே பாருங்க:

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**